தட்டும் ஒலி) அந்தப் பணிகளெல்லாம் தற்போது முடிந்து, கூடுதலான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் தெரிவித்து, அந்தப் பகுதியிலே உள்ள கைத்தறி, நெசவாளர் சமுதாயத்திற்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய வகையிலே ஆபத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 328, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

328—

புதிய மாணவர் விடுதி

***35989—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், மீஞ்சூர் பகுதியிலுள்ள ஆதி திராவிடர் நலப் பள்ளிக்கு புதிய மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி சட்டமன்றத் தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மீஞ்சூர் பகுதியில் ஆதி திராவிடர் நலப் பள்ளி மாணவர் விடுதிக்கான புதிய கட்டடம் கட்டப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால், 25—6—2013 அன்று துவக்கி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுவிட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.*

முற்பகல் 10–10

திரு. பொன். ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்ற நோக்கத்தில் நடைபெறும் மகத்தான ஆட்சியிலே ஆதி திராவிட மக்களின் நலன் காக்கும் காவல் அரணாக விளங்கும், (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் நித்தம் வணங்கும் குல சாமி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் பகுதியில் ஆதி திராவிட மாணவர் விடுதிக்கான புதிய கட்டடத்தைத் திறந்து வைத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அப்பகுதி மாணவர்கள் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியினை மாண்புமிகு அம்மா அவர்களின் புனித பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் நாட்டின் கண்கள் என்பதனை நினைவூட்டும் வகையிலே, தனது பொற்கால ஆட்சியிலே மகத்தான திட்டங்களின்மூலம் என்றும் பெண்ணின் பெருமையை நிலைநாட்டி வரும் தாய்க்குலத்தின் ஒரே தலைமகள், தமிழ் மண்ணின் தலைமகள் மாண்புமிகு அம்மா அவர்களே, பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மீஞ்சூர் பகுதியில் ஆதி திராவிட நல உயர்நிலைப் பள்ளி, சகாயமாதா அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளி மற்றும் D.V.S. ரெட்டி அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளி என்ற மூன்று பள்ளிகள் இயங்கி வருகின்றன. அந்தப் பள்ளிகளிலே சுமார் 1,126–க்கும் மேற்பட்ட ஆதி திராவிட மாணவிகள் பயின்று வருகிறார்கள். மேலும், 200 மாணவர்கள் அந்தப் பள்ளிகளுக்கு வெகு தொலைவிலிருந்து வந்து படிக்கிறார்கள்; அவர்களுக்கும் சிரமமாக இருக்கின்றது. ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு இதை எடுத்துச் சென்று, அந்தப் பகுதியிலே ஆதி திராவிட மாணவியருக்கான விடுதியை அமைத்துத் தருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீஞ்சூரில் இயங்கிவரும் ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியானது 101 மாணவர்கள் மற்றும் 68 மாணவிகள், ஆக மொத்தம் 169 மாணாக்கர்களுடன் இயங்கி வருகிறது. 68 மாணவிகள் மட்டுமே கல்வி பயில்கின்றனர். மாணவிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில், இப்பகுதியில் மாணவியருக்கான புதிய விடுதி கட்டுவது குறித்து கருத்தில் கொள்ளப்படும். மேலும், மீஞ்சூருக்கு அருகில், சுமார் 10 கி.மீ. தூரத்தில், பொன்னேரியில் ஒரு பள்ளி மாணவியர் விடுதி இயங்கி வருகின்றது. மீஞ்சூர் பகுதியில் உள்ள ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவியருக்கு விடுதி வசதி கூடுதலாகத் தேவைப்படும்பட்சத்தில், பொன்னேரியில் அமைந்துள்ள விடுதியையும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதி, பேச்சிப்பாறை ஊராட்சியில் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி ஒன்று உள்ளது. இப்பள்ளி 1958-ல் திரு. காமராஜர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டப்பட்டது. 530 மாணவர்கள் இங்கு கல்வி கற்கிறார்கள், 26 ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள். இந்தப் பள்ளியில் watchman, துப்புரவுப் பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், Chemistry மற்றும் Computer ஆசிரியர்கள் இல்லை. இந்தப் பள்ளியில் கடந்த நான்கு ஆண்டுகளாக எந்தப் பராமரிப்புப் பணியும் செய்யாத காரணத்தினால், Main Block அதாவது, 10 முதல் 12 ஆம் வகுப்பு வரையில் இயங்கும் கட்டடம், ஜவஹர் கட்டடம் மற்றும் தொடக்கப் பள்ளிக்கான கட்டடங்கள், ஜன்னல் மற்றும் கதவு உடைந்த நிலையிலும், மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட நிலையிலும், பெயின்ட் அடித்து பராமரிக்காமலும், புதுப்பிக்காத நிலையிலும் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, இங்கு தண்ணீர்ப் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினால், கழிவறைகள் எல்லாம் சுகாதாரமற்ற நிலையில் காணப்படுகின்றன. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண

வேண்டுமானால், பேச்சிப்பாறை கேம்ப் பாலம் அருகில் உள்ள ஊராட்சி கிணற்றிலிருந்து பள்ளி வளாகம்வரை குடிநீர்க் குழாய் பதித்து 10,000 லிட்டர் கொள்ளளவு உள்ள ஒரு sump கட்ட வேண்டும். அப்போதுதான் இந்த குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும். அதுமட்டுமல்ல, பழமையான தோற்றத்துடன் அபாய நிலையில் ஓட்டுக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் தொடக்கப் பள்ளிக் கட்டடம், தையல் பயிற்சிக் கூடம், மாணவர் விடுதி, Biology Lab, Chemistry Lab, காவலர் விடுதி ஆகியவற்றை உடனடியாக இடித்து அப்புறப்படுத்தவும் மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி விடுதி தேவை சம்பந்தமானதாகும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டடத்தை அப்புறப்படுத்த வேண்டும் என்கிறார்கள். இருப்பினும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, அடித்தட்டு மக்களின் கோரிக்கைகளையெல்லாம் உடனுக்குடன் நிறைவேற்றுகின்ற அரசாக இருப்பதால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்களால் கட்டப்படாமல் விட்டுச்சென்ற 99 விடுதிக் கட்டடங்கள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தற்போதைய 4 ஆண்டுக்கால ஆட்சியில் நாளது தேதிவரை துவக்கப்பட்ட 64 புதிய விடுதிக் கட்டடங்கள், ஆக மொத்தம் 163 விடுதிக் கட்டடங்கள் ரூ.106.39 கோடி செலவில் கட்டப்பட்டும், (மேசையைத் தட்டும் ஒலி) வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் சமுதாயக் கூடங்கள் என 88 கட்டடப் பணிகள் ரூ.22.19 கோடி மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் 251 கட்டடப் பணிகள் ரூ.128.58 கோடி மதிப்பீட்டிலும் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் துவக்கி வைக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வந்துள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அனைத்து

மாவட்டங்களிலும் கண்டுகொள்ளப்படாமல் விடப்பட்டு, கேட்பாரற்று, பராமரிப்பின்றி பழுதடைந்திருந்த 1,080 ஆதி திராவிடர் நல விடுதிகளைப் பராமரிப்பதற்காக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சிறப்பு நிகழ்வாக ஒரே நேரத்தில் ரூ.83.04 கோடி நிதியினை வழங்கியதால், (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பராமரிப்புப் பணிகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டு, தற்போது புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுடைய சமூக பொருளாதார மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி, மறுமலர்ச்சியை உருவாக்கி வருகின்ற போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், இத்துறை மேலும் வேகமாகச் செயல்படவும், விரைந்து பணிகளை ஆற்றவும், மாவட்ட நல அலுவலர்களை வேறு துறையிலிருந்து இத்துறைக்கு மாற்றுப் பணி ஊழியர்களாக நியமிக்காமல், ஆதி திராவிட நலத் துறையிலிருந்தே, அந்தத் துறையில் தொடர்புள்ளவர்களையே, அந்தத் துறையில் நிறைந்த அனுபவம் பெற்றவர்களையே மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்களாக நியமிப்பது குறித்து அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா? சமூக நலத் துறையிலிருந்து, ஆதி திராவிடர் நலத் துறை பிரிந்து 30 ஆண்டுகள் ஆகிவிட்டன. 30 ஆண்டுகளுக்கு முன்னால் மாற்றுப் பணி அவசியப்பட்டது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் சமூக நலத் துறையிலிருந்து இந்தத் துறையை ஒரு தனித் துறையாகப் பிரித்தார். 30 ஆண்டுகளுக்குப் பிறகு இன்னமும் இந்தத் துறைக்கான அலுவலர்களை பிற துறைகளிலிருந்து நியமித்துக் கொண்டிருக்கின்ற நிலை நீடித்துக் கொண்டிருக்கின்றது. எனவே, ஆதி திராவிடர் நலத் துறையிலிருந்தே மாவட்ட அலுவலர்கள், செயற்பொறியாளர்கள் ஆகியோரை நியமிக்கின்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கின்றதா? அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாதது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இந்தக் கருத்தினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 329, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

329—

மின் வாரிய அலுவலகக் கட்டடம்

***28639 திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டத்திலுள்ள மழையூர், புதுப்பட்டி மற்றும் வெட்டன்விடுதி மின் வாரிய பிரிவு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மின் பகிர்மானத்திற்குட்பட்ட மழையூர், புதுப்பட்டி மற்றும் வெட்டன்விடுதி மின் வாரிய பிரிவு